செ.வெ.எண்: 243 நாள்: 16.05.2021

**புதுக்கோட்டை அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் கோவிட் சிகிச்சைக்கு உதவிடும் வகையில் வழிகாட்டுதல்களை வழங்கும் தன்னார்வலர்களின் பணியினை மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் துவக்கி வைத்தார்கள்.**

---

புதுக்கோட்டை அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் கோவிட் சிகிச்சைக்கு உதவிடும் வகையில் பள்ளி, கல்லூரி நாட்டு நலப்பணித்திட்ட ஒருங்கிணைப்பாளர்களான தன்னார்வலர்கள் பணியினை மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள், சிறைச்சாலை மற்றும் ஊழல் தடுப்பு சட்ட அமைச்சர் திரு.எஸ்.ரகுபதி அவர்கள், மாண்புமிகு சுற்றுச்சூழல், காலநிலை மாற்றத்துறை மற்றும் இளைஞர்நலன், விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் திரு.சிவ.வீ.மெய்யநாதன் அவர்கள் ஆகியோர் இன்று (16.05.2021) துவக்கி வைத்தார்கள். இந்நிகழ்ச்சியின் போது மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.பி.உமாமகேஸ்வரி, இ.ஆ.ப., அவர்கள் மற்றும் திரு.கே.கே.செல்லப்பாண்டியன் ஆகியோர் உடனிருந்தார்கள்.

இந்நிகழ்ச்சியில் மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள், சிறைச்சாலை மற்றும் ஊழல் தடுப்பு சட்ட அமைச்சர் அவர்கள் தெரிவித்ததாவது.

கொரோனா தடுப்பு நடவடிக்கைகளில் மருத்துவத்துறையினர், காவல்துறையினர், வருவாய்த்துறையினர் பல்வேறு பணிகளில் தங்களை அர்பணித்து கொண்டுள்ளனர். இதே போன்று நாட்டு நலப்பணித்திட்ட தன்னார்வலர்களும் தாமாக முன்வந்து கொரோனா நோயாளிகளுக்கு உதவிடும் வகையில் கொரோனா தடுப்பு நடவடிக்கைகளில் தங்களை ஈடுபடுத்திக் கொண்டுள்ளனர். பொது மக்களிடத்தில் கொரோனா குறித்த அச்சத்தை போக்குவது நமது கடமையாகும். கொரோனா முதல் அலையை விட இரண்டாவது அலை பண்மடங்கு அதிகரித்துள்ளது. இதனை கருத்தில் கொண்டு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், தமிழக அரசு இணைந்து போர்க்கால அடிப்படையில் விரைந்து நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறார்கள். மேலும் கொரோனா குறித்த வதந்திகளை தெரிவிப்பதை தவிர்க்க வேண்டும்.

புதுக்கோட்டை மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் உள்ள ஆக்ஸிஜன் படுக்கைகளின் எண்ணிக்கை 670 இதில் 370 படுக்கைகளுக்கு மட்டுமே ஆக்ஸிஜன் வசதி செய்யப்பட்டுள்ளது. இந்த 370 படுக்கைகளில் மட்டுமே ஆக்ஸிஜன் தேவைப்படும் நோயாளிகள் அனுமதிக்கப்படுகின்றனர். புதுக்கோட்டை மாவட்டத்தை பொறுத்த வரை கொரோனா நோயாளிகள் அனுமதிக்கப்படும் வகையில் போதுமான படுக்கை வசதிகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

மேலும் கொரோனா தடுப்பு நடவடிக்கைகளில் அரசுக்கு உதவி செய்ய வேண்டும் என்பதை கருத்தில் கொண்டு புதுக்கோட்டை மாவட்ட மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு 60 தன்னார்வலர்கள் சுழற்சி முறையில் பணியாற்ற உள்ளனர். மேலும் தன்னார்வலர்கள் தங்களுக்குரிய பணிகளை உணர்ந்தும், நோயாளிகளை அதிக நேரம் காத்திருப்பதை முற்றிலும் தவிர்த்தல் வேண்டும். மருத்துவமனைக்கு நோயாளிகள் வந்தவுடன் மருத்துவர்களை அணுகி உடனடியாக மருத்துவமனையில் அனுமதிக்க தேவையான நடவடிக்கைகளை மேற்கொண்டு நோயாளிகளுக்கு ஏற்படும் அச்சத்தினை போக்கும் வகையில் செயலாற்ற வேண்டும்.

மருத்துவமனைக்கு வரும் நோயாளிகளுக்கு பரிசோதனை பிரிவு, சிகிச்சை அளிக்கப்படும் இடங்களுக்கு அழைத்துச் சென்று நல்ல வழிகாட்டியாக செயல்பட வேண்டும். மேலும் நோயாளிகள் மருத்துவமனையை விட்டு வெளியே வரமாலும் பார்த்து கொண்டு அவர்களுக்கு உரிய ஆலோசனை வழங்கி அவர்களுக்கென ஒதுக்கப்பட்ட இடத்திலேயே இருக்க அறிவுறுத்த வேண்டும். புதுக்கோட்டை மாவட்டத்தில் தமிழகத்திலேயே முன்னோடியாக மருத்துவமனைகளில் பணியாற்ற தன்னார்வலர்களை இணைத்துள்ளோம். இது மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு எடுத்துச் சென்று இது போன்று தமிழகம் முழுவதும் உள்ள மருத்துவமனைகளில் தன்னார்வலர்களை இணைத்து மருத்துவப் பணியாளர்களின் பணிச்சுமை குறைத்து பணியாற்ற நடவடிக்கை மேற்கொள்ளப்படும். இவ்வாறு மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள், சிறைச்சாலை மற்றும் ஊழல் தடுப்பு சட்ட அமைச்சர் திரு.எஸ்.ரகுபதி அவர்கள் தெரிவித்தார்.

பின்னர் மாண்புமிகு சுற்றுச்சூழல், காலநிலை மாற்றத்துறை மற்றும் இளைஞர்நலன், விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் அவர்கள் தெரிவித்ததாவது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தமிழகத்தில் கோவிட் நோய் தொற்றை தடுக்கும் வகையில் பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறார்கள். அந்த வகையில் நான் அமைச்சராக பதவியேற்றவுடன் சென்னையில் என்எஸ்எஸ், என்சிசி சம்மந்தப்பட்ட அதிகாரிகளை சந்தித்து பேசியபோது தமிழத்தில் 4 லட்சம் நபர்கள் உள்ளதாக தெரிவித்தனர். இவர்களை மருத்துவத்துறையில் உள்ள மருத்துவர்கள் மற்றும் கோவிட்தொற்றால் பாதிக்கப்பட்டவர்களுக்கிடையே இணைப்பு பாலமாக பயன்படுத்தலாம் என ஆலோசிக்கப்பட்டது.

அதனடிப்படையில் மாநில நாட்டு நலப்பணித் திட்ட ஒருங்கிணைப்பாளர் உடனடியாக சென்னையில் இருந்து வருகை வந்து இதற்கான ஏற்பாடுகளை புதுக்கோட்டை மாவட்டத்தில் செய்தார். அதனடிப்படையில் நேற்றையதினம் அறந்தாங்கி அரசு மருத்துவமனையில் தன்னார்வலர்களின் பணி துவக்கி வைக்கப்பட்டது. இன்றையதினம் புதுக்கோட்டை அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையிலும் தன்னார்வலர்களின் பணி துவக்கி வைக்கப்பட்டுள்ளது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் வழிகாட்டுதலின் படி தமிழ்நாட்டிலேயே முதல்முறையாக புதுக்கோட்டை அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் தான் கோவிட் சிகிச்சைக்கு உதவிடும் வகையில் வழிகாட்டுதல்களை வழங்கும் தன்னார்வலர்களின் பணி துவக்கி வைக்கபட்டுள்ளது. இது புதுக்கோட்டை மாவட்டத்திற்கு கிடைத்த பெருமையாகும். கோவிட் சிகிச்சை மேற்கொள்ளும் மருத்துவர்கள், செவிலியர்கள் மற்றும் பல்நோக்கு பணியாளர்கள் உள்ளிட்ட அனைவரும் அதிக பணியால் மனஅழுத்தத்தில் உள்ளனர். இந்த சூழ்நிலையில் தான் கோவிட் நோயாளிகளை காப்பாற்றும் பணிகளை மேற்கொண்டு வருகிறார்கள்.

மாவட்ட ஆட்சித்தலைவர், மருத்துவக்கல்லூரி முதல்வர் உள்ளிட்ட மருத்துவத்துறை சார்ந்த அலுவலர்களை பலதரப்பட்ட பொதுமக்கள் தொலைபேசியில் தொடர்பு கொண்டவண்ணம் உள்ளனர். இதனால் அவர்களின்

பணிகளில் நெருக்கடி ஏற்படுகிறது. இதனை குறைப்பதற்காகவே தன்னார்வலர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர் அவர்களால் புதுக்கோட்டை மாவட்டத்தில் கோவிட் தொற்றை கட்டுப்படுத்தும் வகையில் பல்வேறு இடங்களில் தொடர் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேலும் புதுக்கோட்டை அரசு மருத்துவக்கல்லூரியில் உள்ள கோவிட் நோயாளிகளுக்கு சத்தான உணவை வழங்கும் வகையில் தேவையான நடவடிக்கைளை மேற்கொண்டு உள்ளார்கள். எனவே புதுக்கோட்டை மாவட்டத்தில் உள்ள பொதுமக்கள் அனைவரும் அரசின் கோவிட் தடுப்பு வழிகாட்டு நெறிமுறைகளை உரிய முறையில் பின்பற்ற வேண்டும். இவ்வாறு மாண்புமிகு சுற்றுச்சூழல், காலநிலை மாற்றத்துறை மற்றும் இளைஞர்நலன், விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் திரு.சிவ.வீ.மெய்யநாதன் அவர்கள் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திரு.எல்.பாலாஜி சரவணன், புதுக்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் டாக்டர்.வை.முத்துராஜா அவர்கள், புதுக்கோட்டை அரசு மருத்துவக்கல்லூரி முதல்வர் மரு.பூவதி, மாவட்ட கல்வி அலுவலர் ராஜேந்திரன், மாநில நாட்டுநலப்பணித்திட்ட ஒருங்கிணைப்பாளர் செந்தில்குமார் உள்ளிட்ட தொடர்புடைய அலுவலர்கள் பலர் உடனிருந்தனர்.

---

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், புதுக்கோட்டை.**